இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயம், நெய்வேலி

(சார்பு நீதிமன்றம், நெய்வேலி)

முன்னிலை : திரு. P. முருகன், B.A., L.L.B.,

இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயர்/சார்பு நீதிபதி, நெய்வேலி.

2026-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 06-ஆம் நாள் திங்கட்கிழமை,

இ.வி.கோ.ம.எண்.4/2022

C.N.R. No: TNCD14-000102-2022

மற்றும்

இ.வி.கோ.ம.எண்.7/2022

C.N.R. No: TNCD14-000104-2022

வசந்தா, க/பெ. இளங்கோவன், வயது (62),

நெ.122, வடக்கு அரங்கமங்கலம்,

அரங்கமங்கலம், குறிஞ்சிப்பாடி (TK),

கடலூர் மாவட்டம். .... ம. எண்.4/2022-ன்

மனுதாரர்

செந்தில்குமார் (வயது 28),

த/பெ. அன்பழகன்,

பள்ளித் தெரு, மேட்டுக்குப்பம் & அஞ்சல்,

குறிஞ்சிப்பாடி - தாலுகா,

கடலூர் மாவட்டம். .... ம. எண்.7/2022-ன்

மனுதாரர்

//எதிராக//

1. பாண்டியன், த/பெ. காத்தவராயன்,
   நெ.810 திருவள்ளுவர் நகர்,
   ராசாக்குப்பம், அரங்கமங்கலம் அஞ்சல்,
   குறிஞ்சிப்பாடி தாலுக்கா,
   கடலூர் மாவட்டம்.

2. ஹெச்டிஎஃப்சி எர்கோ இன்சூரன்ஸ் கோ லிமிடெட்,
அதன் சட்ட மேலாளர்,
புதிய எண்.528, பழைய எண்.559,
2-வது தளம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை,
சென்னை, தமிழ்நாடு 600 018.

3. செந்தில்குமார் (வயது 28),
த/பெ. அன்பழகன்,
பள்ளித் தெரு, மேட்டுக்குப்பம் & அஞ்சல்,
குறிஞ்சிப்பாடி - தாலுகா,
கடலூர் மாவட்டம். ....இருமனுக்களின் எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக 24.06.2026-ம் தேதி அன்று இறுதி விசாரணைக்கு வரப்பெற்று, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ஞானபண்டிதன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால், தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், 2-ஆம் எதிர்மனுதாரர் தரப்பில், திரு.P.C.தியாகராஜன், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை, மனு, எதிர்உரை, இரு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இந்நாள் வரையில் இந்த தீர்ப்பாயத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்ததுமான இம்மனுவில் இன்று இந்த தீர்ப்பாயம் ஆராய்ந்து பிறப்பிக்கும்,

பொது உத்தரவு

இம்மனுக்களானது 16.12.2020-ம் தேதி நடந்த சாலை விபத்தில், மனு எண்.4/2022-ன் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடாக ரூ.5,00,000/-மும், மனு எண்.7/2022-ல்-ன் மனுதாரருக்கு ரூ.10,00,000/-மும், பின்வட்டி மற்றும்

செலவுத்தொகை வழங்கக்கோரி இ.ஊ.வா.சட்டம் பிரிவு 166 (1) (a)-ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) <u>மனுக்களின் சுருக்கம்</u> :

கடந்த 16.12.2020 அன்று மாலை சுமார் 4.00 மணியளவில் MCOP.No.4/2022 மற்றும் MCOP.No.7/2022 ஆகிய இரு மனுக்களின் மனுதாரர்கள் அவர்களின் உறவுக்காரர் பெண்ணின் மஞ்சள் நீராட்டு விழாவில் கலந்து கொண்டு MCOP.No.4/2022 என்ற மனுவின் மனுதாரருடன் இளவர் பிரவீன் மற்றும் MCOP.No.7/2022 என்ற மனுவின் மனுதாரர் செந்தில்குமார் ஆகிய மூவரும் செந்தில்குமாருக்கு சொந்தமான TN-31BJ-1829 ஹீரோ ஸ்பிளெண்டர் என்ற இருசக்கர மோட்டார் சைக்கிளில் MCOP.No.7/2022 என்ற மனுவின் மனுதாரர் செந்தில்குமார் அவர்கள் ஓட்ட அவருக்கு பின்னால் MCOP.No.4/2022 என்ற மனுவின் மனுதாரர் உட்கார்ந்து கொண்டு வடலூரிலிருந்து குறிஞ்சிப்பாடி நெடுஞ்சாலையில் நெத்தனாங்குப்பம் தார் சாலை பிரியும் இடத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலையின் இடது புற ஓரமாக சாலை விதிகளை பின்பற்றி சென்றுகொண்டிருந்தபோது மனுதாரர்களுக்கு முன்னால் சென்ற TN-31-CA-4495 என்ற பதிவு எண் கொண்ட Hero CLIO என்ற 1-ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை அதன் ஓட்டுனர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், எவ்வித சைகையும் செய்யாமல் வலது பக்க இண்டிகேட்டர் லைட் போடாமல் இருசக்கர வாகனத்தை திடீர் என்று நெத்தனாங்குப்பம் சாலையில் செல்வதற்கு தெற்கு பக்கம் திருப்பி ஓட்டியதால்

மனுதாரர்கள் பயணம் செய்த வாகனத்தின் மீது மோதி கீழே தள்ளப்பட்டு விபத்து ஏற்பட்டதால், மேற்படி விபத்தில் மனுதாரர்களுக்கு பலத்த அடிபட்டு கொடுங்காயம் மற்றும் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும், விபத்தில் தங்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடாக ம.எண்.4/2022-ன் மனுதாரருக்கு ரூ.5,00,000/-மும், ம.எண்.7/2022-ன் மனுதாரருக்கு ரூ.10,00,000/-மும் இழப்பீடாக வழங்க வேண்டுமென மனுதாரர்களால் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலும், இவ்விபத்தினால் மனுதாரர்களுக்கு ஏற்பட்ட உடல் பாதிப்பு, வருமான இழப்பு மற்றும் போக்குவரத்து செலவு, மருத்துவ செலவு ஆகிய அனைத்து கஷ்ட, நஷ்டங்களுக்கும் 1-ஆம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரின் அஜாக்கிரதையும், கவனக்குறைவு மட்டுமே காரணம் என்றும், எனவே, 1-ஆம் எதிர்மனுதாரரின் வாகனம் 2-ஆம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால், 1, 2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ இழப்பீடு வழங்க வேண்டும் மனுதாரர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

2. <u>2-ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு</u> :

மனுதாரர்கள் தாக்கல் செய்த மனு, சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், செலவுகளுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றும், எதிர்மனுதாரர் மனுவில் சொன்ன சங்கதிகள் அனைத்தையும் மறுப்பதாகவும், உண்மையில், விபத்து நடந்த நேரத்தில் 1-வது எதிர்மனுதாரரின் வாகனம் இந்த எதிர்மனுதாரரிடம் காப்பீடு (Insurance) செய்யப்பட்டிருந்தது என்பதையோ, மற்றும் 1-வது எதிர்மனுதாரர்

முறையான தகுதிச் சான்று (F.C.), அனுமதிச் சீட்டு (Permit), பதிவுச் சான்று (R.C.) ஆகியவற்றை வைத்திருந்தார் என்பதையோ, மற்றும் அந்த வாகனத்தின் ஓட்டுநர் முறையான ஓட்டுநர் உரிமம் (Driving License) வைத்திருந்தார் என்பதையோ இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளவில்லை. 1-வது எதிர்மனுதாரர் இந்த எதிர்மனுதாரருக்கு ஒத்துழைப்பு அளிக்கவில்லை. மேற்படி விபத்து குறித்து இந்த எதிர்மனுதாரரிடம் தெரிவிக்கவில்லை, மேலும் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் ஒருதலைப்பட்சமாக (ex-parte) இருந்து வருகிறார். மேலும், விபத்து நடந்த 16.12.2020 அன்று மனுதாரர், செந்தில்குமார் என்பவரால் ஓட்டப்பட்ட மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து பயணம் செய்தபோது, 1-வது எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் தனது வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து மனுதாரரின் மோட்டார் சைக்கிள் மீது மோதியதாக குறிப்பிட்டுள்ளது பொய்யானவை என்றும், 1-வது எதிர்மனுதாரரர் இருசக்கர வாகனத்தை சாதாரண வேகத்தில், கவனமாகவும் பொறுப்புடனும் ஓட்டி வந்தார். ஆனால், மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த செந்தில்குமார் என்பவர் இரண்டு பின் இருக்கை பயணிகளுடன் (pillion riders), தலைக்கவசம் (helmet) அணியாமல், மிக வேகமாகவும் அலட்சியமாகவும் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்து முதல் எதிர்மனுதாரரின் இருசக்கர வாகனத்தின் மீது மோதினார். மனுதாரரின் வயது, வருமானம் மற்றும் தொழில் ஆகியவை உண்மையானவை அல்ல என்றும், மேற்படி விபத்திற்கு எதிர்மனுதாரர் எந்தவகையிலும் பொறுப்பாகமாட்டார் என்பதால், மேற்படி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனுக்களை செலவுதொகையுடன் தள்ளுபடி செய்ய

கேட்டுக்கொண்டுள்ளனர்.

3) <u>இம்மனுக்களில் தீர்மானிக்கப்பட வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்,</u>

1.	இம்மனுக்களில் கூறப்பட்ட விபத்திற்கு யாருடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணம்?
2.	இரு மனுக்களின் மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்ட நபர் யார்?
3.	இரு மனுக்களின் மனுதாரர்களுக்கு அவர்கள் கோரும் இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கதா? ஆம் எனில் எவ்வளவு?

4) மனுக்களின் விசாரணையின்போது இரு மனுக்களும் இணைந்து விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கடந்த 17.09.2025-ம் தேதி அன்று குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில், இரு மனுக்களும் இணைந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு, சாட்சியங்களும், சான்றாவணங்களும் ம.எண்.4/2022 மனுவில் பதிவு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளன. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 மற்றும் 2 சாட்சியம் அளிக்கப்பட்டும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.19 வரையிலான ஆவணங்களும், நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் சா.சா.1 ஆக மோட்டார் வாகன ஆய்வாளர் விசாரிக்கப்பட்டு, சா.சா.ஆ.1, 2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை சான்றாவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

5) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை எண் :- 1</u>**

(i) இம்மனுக்களில் கூறப்பட்ட விபத்திற்கு யாருடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணம் என்ற பிரச்சினையைப்பற்றி ஆராய்கையில், கடந்த 16.12.2020 அன்று மாலை சுமார் 4.00 மணியளவில் MCOP.No.4/2022 மற்றும் MCOP.No.7/2022 மனுக்களின் மனுதாரர்கள் ஹீரோ ஸ்பிளெண்டர் மோட்டார் சைக்கிள் பதிவு எண். TN-31-BJ-1829 என்ற இருசக்கர வாகனத்தை MCOP.No.7/2022 என்ற மனுவின் மனுதாரர் செந்தில்குமார் என்பவர் ஓட்ட MCOP.No.4/2022 என்ற மனுவின் மனுதாரரான வசந்தா என்பவர் பின்னால் அமர்ந்துகொண்டும், வடலூரிலிருந்து குறிஞ்சிப்பாடி நெடுஞ்சாலையில் நெத்தனாங்குப்பம் தார் சாலை பிரியும் இடத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலையின் இடது புற ஓரமாக சாலை விதிகளை பின்பற்றி சென்றுகொண்டு இருந்தபோது மனுதாரர்களுக்கு முன்னால் சென்ற TN-CA-4495 என்ற பதிவு எண் கொண்ட Hero CLIO என்ற 1-ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை அதன் ஓட்டுனர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், எவ்வித சைகையும் செய்யாமல் வலது பக்க இண்டிகேட்டர் லைட் போடாமல் இருசக்கர வாகனத்தை திடீர் என்று நெத்தனாங்குப்பம் சாலையில் செல்வதற்கு தெற்கு பக்கம் திருப்பி ஓட்டியதால் மனுதாரர்கள் பயணம் செய்த இரு சக்கர வாகனம் மீது மோதியதில் மனுதாரர்கள் இருவருக்கும் விபத்து ஏற்பட்டு கொடுங்காயங்கள் அடைந்துள்ளதாக தங்களது மனுவில் கூறியுள்ளனர். மனுதாரர்கள் தங்களது முதன்மை சாட்சியத்திலும், பிரமாண வாக்குமூலத்திலும் மேற்படி மனுவில் உள்ள சங்கதிகளை நிரூபிக்கும்

வண்ணம் சாட்சியம் அளித்துள்ளனர். மேற்படி தங்கள் வழக்கிற்கு ஆதரவாக எதிர்மனுதாரரின் ஓட்டுநர் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆகவும், மனுதாரர்களின் விபத்து பதிவேட்டு அறிக்கை ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.13 ஆகவும் குறியீடு செய்துள்ளார்கள். 1-ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ம.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், ஆகவே மனுதாரர்கள் தரப்பில் 1-ஆம் எதிர்மனுதாரரின் அதிவேகமும், அஜாக்கிரதையும் இவ்விபத்திற்கு காரணம் என்று மனுதாரர்கள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக வாதுரை முன் வைக்கப்பட்டது.

(ii) ஆகவே ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையை பார்வையிடுகையில், விபத்தானது 1-ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், கரடுமுரடாகவும், எவ்வித சைகையும் செய்யாமல் வலது பக்க indicator light போடாமல் வாகனத்தை திடீரென்று சாலையின் தெற்கு பக்கம் திருப்பி ஓட்டியதால் மேற்படி விபத்தானது ஏற்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. ம.சா.ஆ.3 மற்றும் 13 ஆகிய விபத்து பதிவேட்டு அறிக்கையிலும் 2 சக்கர வாகனம் இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மோட்டார் வாகன அறிக்கை ம.சா.ஆ.15-ல் 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் தணிக்கை செய்யப்பட்டு மேற்படி வாகனத்தின் சைலன்சர் எக்ஸாஸ்ட் பைப் நசுங்கிய நிலையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் விபத்தானது எந்தவித இயந்திர கோளாரினாலும் நடைபெறவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே வேகமாக 1-ஆம் எதிர்மனுதாரரின் வாகனம் திடீரென்று வந்து மோதியதாலே சைலன்சர் எக்ஸாஸ்ட்

பைப் நசுங்கியுள்ளது தெரிய வருகிறது.

(iii) இந்நிலையில். 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையில், 1-ம் எதிர்மனுதாரரான இரு சக்கர வாகனத்தின் ஓட்டுநர் இருசக்கர வாகனத்தை சாதாரண வேகத்தில், கவனமாகவும் பொறுப்புடனும் ஓட்டி வந்ததாகவும், ஆனால், மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த செந்தில்குமார் என்பவர் இரண்டு பின் இருக்கை பயணிகளுடன், தலைக்கவசம் அணியாமல், மிக வேகமாகவும் அலட்சியமாகவும் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்து 1வது எதிர்மனுதாரரின் இருசக்கர வாகனத்தின் மீது மோதியதாக கூறியுள்ள நிலையில், மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையின் படியும், முதல் தகவல் அறிக்கையின்படியும், 1-ம் எதிர்மனுதாரர் ஓட்டிவந்த இரு சக்கர வாகனத்திற்கு சைலன்சர் எக்ஸாஸ்ட் பைப் நசுங்கி சேதமடைந்துள்ளதால் மனுதாரர் வாகனம் மீது 1-ஆம் எதிர்மனுதாரர் திடீரென்று வாகனத்தை எந்தவித சைகையும் செய்யாமல் திடீரென்று திருப்பிய விபத்து ஏற்படுத்தியுள்ளது தெரிய வருகிறது. ஆகவே, 1-ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் அவரது வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று மனுதாரர்களின் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளதாக தெரியவருவதால், எனவே 1-ம் எதிர்மனுதாரரின் அதிவேகமும், அஜாக்கிரதையுமே, விபத்திற்கு காரணம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

6) <u>தீர்வுக்குரிய பிரச்சனை எண்: 2</u>

விபத்திற்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்ட நபர் யார் என்ற பிரச்சினையைப்பற்றி ஆராய்கையில், ஏற்கனவே 1-ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின்

அஜாக்கிரதை விபத்திற்கு காரணம் என்று முடிவு செய்துள்ள நிலையில், ம.சா.ஆ.12 மற்றும் ம.சா.ஆ.15 காப்பீட்டு சான்றிதழ் மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் படி, 1-ம் எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய TN-31-CA-4495 என்ற வாகனத்தின் உரிமையாளர் என்பதால், 1-ம் எதிர்மனுதாரரே அவரது ஓட்டுநரின் செய்கைக்கு முழு பொறுப்பாளர் ஆவார். இந்நிலையில், 1-ம் எதிர்மனுதாரர் வாகனமானது 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.12 காப்பீட்டு சான்றிலிருந்து தெரிய வருகிறது. ம.சா.ஆ.12 ஐ இந்த தீர்ப்பாயம் பார்வையிடுகையில், காப்பீடானது 18.01.2019 முதல் 17.01.2024 வரை அமலில் இருப்பதால், விபத்து நடைபெற்ற 16.12.2020-ம் தேதி காப்பீடு அமலில் இருந்துள்ளது தெரிய வருகிறது. 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் காப்பீடு சான்று மறுக்கப்படவில்லை. எனவே மனுதாரர்களுக்கான இழப்பீட்டினை 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ, கூட்டாகவோ வழங்க வேண்டும் என இப்பிரச்சனை எண் .2 க்கு இந்த தீர்ப்பாயம் தீர்வு காண்கிறது.

7). **தீர்வுக்குரிய பிரச்சனை எண்.** : 3

மனுதாரர்களுக்கு அவர்கள் கோரும் இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கதா? என்று பார்க்கையில்

(7.1) மனு எண்.4/2022 :

மனுதாரருக்கு அவர் கோரும் இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கதா? ஆம் எனில் எவ்வளவு என ஆராய்கையில் மனுதாரருக்கு விபத்து சமயத்தில் 62 வயது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மனுதாரரின் விபத்து பதிவேட்டு நகல் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் மனுதாரரின் வயது 47 என்று

குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் மனுதாரரின் பிறந்த வருடம் 1960 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே விபத்து நடந்த சமயத்தில் மனுதாரின் வயது 62 என இந்த தீர்ப்பாயம் ஏற்றுக்கொள்கிறது. மேலும், மனுதாரர் விபத்தின் போது தினக்கூலி மற்றும் விவசாய வேலை செய்து மாதம் ரூ.15,000/- சம்பாதித்து வந்ததாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான ஆவணம் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை. இருந்தபோதிலும், மனுதாரர் தினக்கூலி மற்றும் விவசாய வேலை பார்த்து தோராய வருமானமாக 2022-ம் வருடம் மாதம் ரூ.9,000/- பெற்றிருக்கக்கூடும் என இந்த தீர்ப்பாயம் நிர்ணயிக்கிறது.

8. விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்ற பின்னர் காயத்தின் தன்மை கருதி மேல்சிகிச்சைக்காக பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு விபத்து நடந்த அன்றே 16.12.2020 வெளிப்புறநோயாளியாக மனுதாரருக்கு ஏற்பட்ட தாடையில் சிராய்ப்பு, முட்டியில் சிராய்ப்பு, இடது முழுங்கையில் சிராய்ப்பு, வலது பாதத்தில சிறிய சிராய்ப்பு, வலது முட்டியில் சிறிய சிராய்ப்பு மற்றும் உடல் முழுவதும் பல கொடுங்காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்றுள்ளது ம.சா.ஆ.3 மற்றும் 7 ஆவணங்களிலிருந்து தெரிய வருகிறது. மேலும், மனுதாரர் மருத்துவ குழுமத்தில் ஆஜராகிய வகையில், அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மைக்கு 3% ஊனம் என்று நீ.ம.சா.ஆ.1 சான்றிதழ் கொடுக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 2024 (2) SAR (AC) 758 என்ற வழக்கில் வழங்கிய வழிகாட்டுதலின் படி, 2020-ல்

ஏற்பட்ட விபத்திற்கு 1% ஊனத்திற்கு ரூ.7,000/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை இந்த தீர்ப்பாயம் பின்பற்றவேண்டிய அவசியமாகிறது, மனுதாரருக்கு ஊன சதவிகிதமாக 3% நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் மேற்கூறிய மொழிந்துரையின் படி (3 x ரூ.7,000/-) ரூ.21,000/- மனுதாரருக்கு காயத்திற்கான இழப்பீடாக வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

9. மேலும் மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட தாடையில் சிராய்ப்பு, முட்டியில் சிராய்ப்பு, இடது முழுங்கையில் சிராய்ப்பு, வலது பாதத்தில் சிறிய சிராய்ப்பு, வலது முட்டியில் சிறிய சிராய்ப்பு மற்றும் உடல் முழுவதும் பல கொடுங்காயம் ஏற்பட்டு குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனை மற்றும் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில், சிகிச்சை பெற்றுள்ளதால், மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.15,000/-ஐ இழப்பீடாக வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

10. மனுதாரருக்கு விபத்தினால் கொடுங்காயம் ஏற்பட்டுள்ளதால், விபத்து நடந்த அன்று உள்நோயாளியாகவும், மற்ற நாட்களில் வெளிப்புற நோயாளியாகவும் பல தேதிகளில் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுள்ளதால் அவருக்கு ஏற்பட்ட போக்குவரத்து செலவீனங்களுக்கு ரூ.10,000/-ஐ வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகின்றது.

11. மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக அவர் ஊட்டச்சத்து மிக்க உணவு எடுத்திருக்க வேண்டியது அவசியம் என்பதால் ஊட்டச்சத்திற்காக ரூ.10,000/- இழப்பீடு பெற அருகதையுடையவர் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

12. மனுதாரர் தனக்கு ஏற்பட்ட காயத்தின் காரணமாக சிகிச்சையில்

இருந்ததால், அவர் சுமார் 2 மாதங்கள் விவசாய வேலை பார்த்திருக்க இயலாது. எனவே, விபத்து சமயத்தில் அவர் வேலை செய்யாததற்கு ஏற்பட்ட வருமான இழப்பீடாக 2 x ரூ.9,000/- = ரூ.18,000/- கொடுக்கலாம் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

13. ஆகவே, மேற்படி பரிசீலினையின் அடிப்படையில் மனுதாரருக்கு கீழ்க்கண்டவாறு இழப்பீடு வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

கணக்கீடு-14

ஊனத்திற்கான இழப்பீடு	ரூ. 21,000/-
வலி மற்றும் வேதனைக்கான இழப்பீடு	ரூ.15,000/-
போக்குவரத்து	ரூ.10,000/-
ஊட்டச்சத்து	ரூ. 10,000/-
சிகிச்சையின் போது வருமான இழப்பு	ரூ.18,000/-
மொத்தம்	ரூ.74,000/-

15. எனவே, விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடாக மனு எண். 4/2022-ன் மனுதாரருக்கு மொத்த இழப்பீடாக ரூ.74,000/- ஐ மனுதாரருக்கு 1, 2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ வழக்கு செலவுத்தொகையுடன் வழங்க வேண்டும் என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

(7.2) மனு எண். 7/2022

(i) மனுதாரருக்கு அவர் கோரும் இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கதா? ஆம் எனில் எவ்வளவு என ஆராய்கையில் மனுதாரருக்கு விபத்து சமயத்தில் 28 வயது

என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மனுதாரரின் விபத்து பதிவேட்டு நகல் ம.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் மனுதாரரின் வயது 27 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் மனுதாரரின் பிறந்த வருடம் 1993 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ம.சா.ஆ.2 ஆவணத்தின் படி எடுத்துக்கொண்டால் விபத்து சமயத்தில் மனுதாரின் வயது 29 என இந்த தீர்ப்பாயம் ஏற்றுக்கொள்கிறது. மனுதாரர் விபத்தின் போது கம்பி பிட்டர் (Centring Labour) மற்றும் விவசாய வேலை செய்து மாதம் ரூ.18,000/- சம்பாதித்து வந்ததாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான ஆவணம் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர் கம்பி பிட்டர் (Centring Labour) மற்றும் விவசாய வேலை பார்த்து தோராய வருமானமாக 2022-ம் வருடம் மாதம் ரூ.12,000/- பெற்றிருக்கக்கூடும் என இந்த தீர்ப்பாயம் நிர்ணயிக்கிறது.

8. மேலும், விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனை, முதலுதவி சிகிச்சை பெற்ற பின்னர் காயத்தின் தன்மை கருதி மேல்சிகிச்சைக்காக பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு விபத்து நடந்த அன்றே 16.12.2020 வெளிப்புறநோயாளியாக மனுதாரருக்கு ஏற்பட்ட நெற்றியில் சிராய்ப்பு காயம், இடது மணிக்கட்டில் சிராய்ப்பு காயம், மேல் உதட்டில் காயம், வலது மணிக்கட்டில் சிறிய சிராய்ப்பு காயம், இடது காதிலிருந்து இரத்தம் வெளியேறுதல், உடல் முழுவதும் கொடுங்காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்றுள்ளது ம.சா.ஆ.13 மற்றும் 19 ஆவணங்களிலிருந்து தெரிய வருகிறது. மேலும், மனுதாரர்

மருத்துவ குழுமத்தில் ஆஜராகிய வகையில், அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மைக்கு 6% ஊனம் என்று நீ.ம.சா.ஆ.1 சான்றிதழ் கொடுக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 2024 (2) SAR (AC) 758 என்ற வழக்கில் வழங்கிய வழிகாட்டுதலின் படி, 2020-ல் ஏற்பட்ட விபத்திற்கு 1% ஊனத்திற்கு ரூ.7,000/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை இந்த தீர்ப்பாயம் பின்பற்றவேண்டிய அவசியமாகிறது. மனுதாரருக்கு ஊன சதவிகிதமாக 6% நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் மேற்கூறிய மொழிந்துரையின் படி (6 x ரூ.7,000/-) ரூ.42,000/- மனுதாரருக்கு காயத்திற்கான இழப்பீடாக வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

9. மேலும் மனுதாரருக்கு விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட நெற்றியில் சிராய்ப்பு காயம், இடது மணிக்கட்டில் சிராய்ப்பு காயம், மேல் உதட்டில் காயம், வலது மணிக்கட்டில் சிறிய சிராய்ப்பு காயம், இடது காதிலிருந்து இரத்தம் வெளியேறுதல், உடல் முழுவதும் கொடுங்காயம் ஏற்பட்டு குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனை மற்றும் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில், சிகிச்சை பெற்றுள்ளதால், மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.25,000/-ஐ இழப்பீடாக வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

10. மனுதாரருக்கு விபத்தினால் கொடுங்காயம் ஏற்பட்டுள்ளதால், விபத்து நடந்த அன்று உள்நோயாளியாகவும், மற்ற நாட்களில் வெளிப்புற நோயாளியாகவும் பல தேதிகளில் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுள்ளதால் அவருக்கு ஏற்பட்ட போக்குவரத்து செலவீனங்களுக்கு ரூ.10,000/-ஐ வழங்கலாம் என இந்த

தீர்ப்பாயம் கருதுகின்றது.

11. மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக அவர் ஊட்டச்சத்து மிக்க உணவு எடுத்திருக்க வேண்டியது அவசியம் என்பதால் ஊட்டச்சத்திற்காக ரூ.15,000/- இழப்பீடு பெற அருகதையுடையவர் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

12. மனுதாரர் தனக்கு ஏற்பட்ட காயத்தின் காரணமாக சிகிச்சையில் இருந்ததால், அவர் சுமார் 3 மாதங்கள் விவசாய வேலை பாத்திருக்க இயலாது. எனவே, விபத்து சமயத்தில் அவர் வேலை செய்யாததற்கு ஏற்பட்ட வருமான இழப்பீடாக 3 x ரூ.12,000/- = ரூ.36,000/- கொடுக்கலாம் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

13. ஆகவே, மேற்படி பரிசீலினையின் அடிப்படையில் மனுதாரருக்கு கீழ்க்கண்டவாறு இழப்பீடு வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

<u>கணக்கீடு</u>-14

ஊனத்திற்கான இழப்பீடு	ரூ. 42,000/-
வலி மற்றும் வேதனைக்கான இழப்பீடு	ரூ.25,000/-
போக்குவரத்து	ரூ.10,000/-
ஊட்டச்சத்து	ரூ. 15,000/-
சிகிச்சையின் போது வருமான இழப்பு	ரூ.36,000/-
மொத்தம்	ரூ.1,28,000/-

15. எனவே, விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடாக மனு எண். 7/2022-ன் மனுதாரருக்கு மொத்த இழப்பீடாக ரூ.1,28,000/- ஐ மனுதாரருக்கு 1, 2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ வழக்கு

செலவுத்தொகையுடன் வழங்க வேண்டும் என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

16) **இறுதியாக,**

மனு எண் : 4 /2022 :

1.	இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டும்,
2.	மனுதாரருக்கு ரூ.**74,000**/-(ரூபாய் எழுபத்து நான்கு ஆயிரம் மட்டும்)ஐ மோட்டார் வாகன விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடாக 1, 2 எதிர்மனுதாரர்கள் வழக்கு செலவுத்தொகையுடன் வழங்க வேண்டுமென்றும்,
3.	மனு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்த காலங்களுக்கு மனுதாரருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல என்றும்,
4.	மேற்படி இழப்பீட்டு தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் 7.5% வட்டி செலுத்த வேண்டுமென்றும், எதிர்மனுதாரர் இந்த இழப்பீட்டு தொகையை இரண்டு மாதங்களுக்குள் நெய்வேலி டவுன்ஷிப், பிளாக் -2 பாரத ஸ்டேட் வங்கி கிளையின் சேமிப்பு கணக்கு எண்.42827304995-ல் நேரடியாக RTGS/NEFT முறையில் செலுத்தப்பட வேண்டும் என்றும்,
5.	மேற்கண்ட வகையில் தொகை செலுத்தப்பட்டவுடன் மேற்படி இழப்பீட்டு தொகை முழுவதையும் மனுதாரர் பெற்றுக்கொள்ளலாம் என்றும்,
6.	வழக்கறிஞர் கட்டணமாக ரூ.3,375/- நிர்ணயிக்கப்பட்டும்,
7.	இம்மனுதாரருக்கு இம்மனுவில் ரூ.235/- மட்டுமே நீதிமன்ற கட்டணமாக செலுத்த வேண்டும் என்பதால், அவர் வழக்கு தாக்கல் செய்யும் போது நீதிமன்ற கட்டணமாக ரூ.500/- செலுத்தியிருக்கிறார் என்பதால், மீதி செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் இல்லை என்றும்,
8.	மனுதாரர் வங்கி கணக்கு விபரத்தை கொடுத்தவுடன் அவருக்கு சேர வேண்டிய தொகை அவர் வங்கி கணக்கில் செலுத்தி வைக்க வேண்டுமென்றும் உத்திரவிடப்படுகிறது.

16). **இறுதியாக,**

மனு எண்: 7/2022 :

1.	இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டும்,
2.	மனுதாரருக்கு ரூ.1,28,000/- (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்து எட்டாயிரம் மட்டும்)ஐ மோட்டார் வாகன விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடாக 1, 2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ வழக்கு செலவுத்தொகையுடன் வழங்க வேண்டும் என்றும்
3.	மனு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்த காலங்களுக்கு மனுதாரருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல என்றும்,
4.	மேற்படி இழப்பீட்டு தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் 7.5% வட்டி செலுத்த வேண்டுமென்றும், எதிர்மனுதாரர் இந்த இழப்பீட்டு தொகையை இரண்டு மாதங்களுக்குள் நெய்வேலி டவுன்ஷிப், பிளாக் -2 பாரத ஸ்டேட் வங்கி கிளையின் சேமிப்பு கணக்கு எண்.42827304995-ல் நேரடியாக RTGS/NEFT முறையில் செலுத்தப்பட வேண்டும் என்றும்,
5.	மேற்கண்ட வகையில் தொகை செலுத்தப்பட்டவுடன் மனுதாரரின் உடல்நிலை மருத்துவ செலவை கருத்தில் கொண்டு மேற்படி இழப்பீட்டு தொகை முழுவதையும் மனுதாரர் வட்டியுடன் பெற்றுக்கொள்ளலாம் என்றும்,
6.	வழக்கறிஞர் கட்டணமாக ரூ.5,560/- நிர்ணயிக்கப்பட்டும்
7.	இம்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்யும் போது நீதிமன்ற கட்டணமாக ரூ.500/-ஐ மட்டும் செலுத்தியிருக்கிறார். மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை செலுத்த இடை மனு எண்.27/2022 தாக்கல் செய்து, 10.02.2022-ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி விலக்கு பெற்றிருப்பதால், மீதமுள்ள நீதிமன்ற கட்டணமான ரூ.152/- ஐ மனுதாரர் 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும்,
8.	மனுதாரர் வங்கி கணக்கு விபரத்தை கொடுத்தவுடன் அவருக்கு சேர வேண்டிய தொகை அவர் வங்கி கணக்கில் செலுத்தி வைக்க

	வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த பொது உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிபொறியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 06-ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

P MURUGAN
Digitally signed by P MURUGAN
Date: 2026.07.06 17:27:19 +0530

இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்,

(சார்பு நீதிபதி, நெய்வேலி)

மற்ற விவரங்கள்

மனு எண் : 4/2022:

மனு தாக்கலான தேதி	03.02.2022
உத்தரவு நாள்	06.07.2026
இழப்பீட்டுத்தொகை	ரூ.**74,000**/-(ரூபாய் எழுபத்து நான்கு ஆயிரம் மட்டும்)
வட்டி விகிதம் மற்றும் செலுத்தப்பட வேண்டிய காலம்	மனு தேதியான 03.02.2026 லிருந்து தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை (தவறுகையினால் மனு தள்ளுபடி ஆகியிருந்த காலங்கள் தவிர்த்து) ஆண்டு ஒன்றுக்கு 7.5% வட்டி மற்றும் இம்மனுவின் செலவுத் தொகையும் சேர்த்து இன்றிலிருந்து 60 நாட்களுக்குள் நெய்வேலி சார்பு

	நீதிமன்றத்தில் வைப்பீடு செலுத்த வேண்டும்.
மொத்த நீதிமன்ற கட்டணம்	ரூ.235/-
செலுத்திய நீதிமன்ற கட்டணம்	--
மனுதாரர் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம்	--
நீதிமன்ற கட்டணம் செலுத்துவதற்கான காலம்	மனுதாரர் இம்மனுவிற்காக செலுத்தவேண்டிய மொத்த நீதிமன்ற கட்டணத்தையும் செலுத்திவிட்டார்.
அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை	ரூ.3,850/-
மனு தள்ளுபடியான காலம் ஏதேனும் உண்டா	இல்லை

மனு எண் :4/2022

செலவுத்தொகை பட்டியல்

மனுதாரர் தரப்பு செலவுத்தொகை பட்டியல்	தொகை	
	ரூ.	பை.
நீதிமன்றம் கட்டணம்	ரூ.235	-
வக்காலத்து கட்டணம்	ரூ.10	-
கட்டளை சார்வு கட்டணம்	ரூ.30	-
தட்டச்சு கூலி	ரூ.200	-
வழக்கறிஞர் கட்டணம்	ரூ.3,375	-
மொத்தம்	**ரூ.3,850/-**	-

இம்மனுவின் செலவுத்தொகையான ரூ.3,850/- தொகையினை 1, 2 எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்தவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

மற்ற விபரங்கள்

மனு எண்.7/2022:

மனு தாக்கலான தேதி	03.02.2022
உத்தரவு நாள்	06.07.2026
இழப்பீட்டுத்தொகை	**ரூ.1,28,000/-** (ரூபாய் ஒரு லட்சத்து பதினேழு ஆயிரம் மட்டும்)
வட்டி விகிதம் மற்றும் செலுத்தப்பட வேண்டிய காலம்	மனு தேதியான 03.02.2022-லிருந்து தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை (தவறுகையினால் மனு தள்ளுபடி ஆகியிருந்த காலங்கள் தவிர்த்து) ஆண்டு ஒன்றுக்கு 7.5% வட்டி மற்றும் இம்மனுவின் செலவுத் தொகையும் சேர்த்து இன்றிலிருந்து 60 நாட்களுக்குள் நெய்வேலி சார்பு நீதிமன்றத்தில் வைப்பீடு செலுத்த வேண்டும்.
மொத்த நீதிமன்ற கட்டணம்	ரூ.652/-
செலுத்திய நீதிமன்ற கட்டணம்	ரூ.500/-
மனுதாரர் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம்	ரூ.152/-
நீதிமன்ற கட்டணம்	மனுதாரர் இம்மனுவிற்காக

செலுத்துவதற்கான காலம்	செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணமான ரூ.152/-ஐ உத்தரவு தேதியான 06.07.2026 லிருந்து 15 நாட்கள் காலகெடுவிற்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும்.
அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை	ரூ.6,452/-
மனு தள்ளுபடியான காலம் ஏதேனும் உண்டா	இல்லை

மனு எண் : 7/2022

செலவுத்தொகைப் பட்டியல்

மனுதாரர்கள் தரப்பு செலவுத் தொகை பட்டியல்	தொகை	
	ரூ.	பை.
நீதிமன்றம் கட்டணம்	652	-
வக்காலத்து கட்டணம்	10	-
கட்டளை சார்வு கட்டணம்	30	-
தட்டச்சு கூலி	200	-
வழக்கறிஞர் கட்டணம்	5,560	-
மொத்தம்	6,452	-

(இம்மனுவின் செலவுத்தொகையான 6,452/-ஐ 1, 2 எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.)

P MURUGAN

Digitally signed by P MURUGAN
Date: 2026.07.06 17:27:49 +0530

இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்,

(சார்பு நீதிபதி, நெய்வேலி)

<u>இணைப்பு</u> :-

(1)	**மனுதாரர்கள் தரப்பு சாட்சிப்பட்டியல்-**	
1.	ம.சா.1 ..	வசந்தா
2.	ம.சா.2 ..	செந்தில்குமார்
(2)	**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிப்பட்டியல்**	
(3)	**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணப்பட்டியல் -**	

ம.சா.ஆ.1	முதல் தகவல் அறிக்கை	நகல்
ம.சா.ஆ.2	மனுதாரரின் ஆதார் அட்டை	நகல்
ம.சா.ஆ.3	மனு எண்.4/2022-ன் மனுவின் மனுதாரரின் விபத்து பதிவேடு	நகல்
ம.சா.ஆ.4	1-ம் எதிர்மனுதாரரின் வாகன காப்பீடு	நகல்
ம.சா.ஆ.5	1-ம் எதிர்மனுதாரரின் வாகன பதிவேடு	நகல்
ம.சா.ஆ.6	3-ம் எதிர்மனுதாரரின் வாகன பதிவேடு	நகல்
ம.சா.ஆ.7	பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனை கொடுக்கப்பட்ட மருத்துவ குறிப்பு	நகல்
ம.சா.ஆ.8	முதல் தகவல் அறிக்கை	நகல்
ம.சா.ஆ.9	மனு எண்.7/2022-ன் மனுவின் மனுதாரரின் ஆதார் அட்டை	நகல்
ம.சா.ஆ.10	மனு எண்.7/2022-ன் மனுவின் மனுதாரரின் வாகன பதிவேடு	நகல்
ம.சா.ஆ.11	1-ஆம் எதிர்மனுதாரரின் வாகன பதிவேடு	அசல்
ம.சா.ஆ.12	1-ஆம் எதிர்மனுதாரரின் வாகன காப்பீடு நகல்	நகல்
ம.சா.ஆ.13	மனு எண்.7/2022-ன் மனுவின் மனுதாரரின் விபத்து பதிவேடு	நகல்
ம.சா.ஆ.14	மனு எண்.7/2022-ன் மனுவின் மனுதாரரின் வாகன ஆய்வு அறிக்கை	நகல்
ம.சா.ஆ.15	1-ஆம் எதிர்மனுதாரரின் வாகன ஆய்வு அறிக்கை	நகல்
ம.சா.ஆ.16	பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனை விடுவிப்பு சான்று	நகல்

ம.சா.ஆ.17	பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனை கொடுக்கப்பட்ட மருத்துவ ரசீதுகள்	அசல்
ம.சா.ஆ.18	மனு எண்.7/2022-ன் மனுவின் மனுதாரரின் புகைப்படம்	அசல்
ம.சா.ஆ.19	ஜிப்மர் மருத்துவமனையில் மருந்து சீட்டு	அசல்
(4) நீதிமன்ற சான்றாவணப்பட்டியல் :		
நீம.ஆ.1..	ம.சா.1ன் ஊனச்சான்று (ம.எண்.4/2022)	அசல்
நீம.ஆ.2..	ம.சா.2 ன் ஊனச்சான்று (ம.எண்.7/2022)	அசல்
(5) சாட்சிகளின் சாட்சி :		
சா.சா.1	மணிகண்டன் (மோட்டார் வாகன ஆய்வாளர்)	
(6) சாட்சி சான்றாவணப்பட்டியல் :		
சா.சா.ஆ.1	மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I அளித்த கடிதம்	அசல்
சா.சா.ஆ.2	வேல்முருகன் என்பவரின் ஓட்டுநர் உரிமத்திற்கான விண்ணப்பம்	அசல்

P MURUGAN Digitally signed by P MURUGAN Date: 2026.07.06 17:28:21 +0530

இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயர்,

(சார்பு நீதிபதி, நெய்வேலி)

<u>குறிப்பு:-</u>

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 11.05.2020 ம் தேதி Tr.C.M.P. Nos. 264 to 281 of 2020 M/s Cholamandalam MS General Insurance Company Limited //Vs// Mr.Ayyannar.S and Other என்ற வழக்கில் வழங்கிய உத்தரவுக்கிணங்க தனியாக தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் இந்த உத்தரவில் இணைக்கப்பட்டுள்ளன.

Draft/ Fair Order (AFT)
MCOP.No.4/2022,
C/W. MCOP.No.7/2022
D.O.O. 06.07.2026.